# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

முறையீட்டு மனு எண்: 0422/2016/பேரூராட்சி

ஆணை எண்: 051/2017

நாள்: 31/03/2017

திருமதி. கே. பார்வதி,
8/10, மேல சித்திரைச் சாவடி,
உளியம்பாளையம், தீனம்பாளையம் (அஞ்சல்),
கோயம்புத்தூர் – 641 109. – முறையீட்டு மனுதாரர்

திருமதி. புவனேஸ்வரி,
செயல் அலுவலர், தாளியூர் பேரூராட்சி,
தொண்டாமுத்தூர், கோவை மாவட்டம். – எதிர் மனுதாரர்

கோவை மாவட்டம், தாளியூர் பேரூராட்சியைச் சேர்ந்த திருமதி. கே. பார்வதி அவர்களின் 25.06.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தால் பெறப்பட்டு 0422/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:-

## ஆணை

முறையீட்டு மனுதாரர், தனது 25/06/2016 நாளிட்ட முறையீட்டு மனுவில், கோயம்புத்தூர் மாவட்டம், திருமலையாம்பாளையம் மற்றும் பள்ளப்பாளையம் பேரூராட்சிகளில் முறையே 12.01.2006 முதல் 15.09.2011 முடிய மற்றும் 01.02.2014 முதல் 30.05.2015 முடிய செயல் அலுவலராக பணியாற்றியபோது எதிர்மனுதாரர், திருமதி. புவனேஸ்வரி பல முறை, முறைகேடுகளில் ஈடுபட்டு பேரூராட்சிகளின் நிதியில் ஊழல் புரிந்துள்ளது தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மேற்கண்ட பேரூராட்சிகளில் இருந்து பெறப்பட்ட வரவு-செலவு கணக்குகளை ஆய்வுக்கு அனுப்பியுள்ளதாகவும் ஆவணங்கள் சுமார் 10 கிலோ அளவு அதிகமாக இருப்பதால் விசாரணைக்கு அழைக்கும் போது நேரில் சமர்ப்பிக்கத் தயாராக உள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் மனுதாரர் தனது புகார் மனுவிற்கு ஆதாரமாக கோயம்புத்தூர் மாவட்டம், பள்ளப்பாளையம் பேரூராட்சியில் 2014-15ம் நிதியாண்டில் செயல் அலுவலர் திருமதி புவனேஸ்வரி அவர்கள் பேரூராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம், பொதுசுகாதாரம் மற்றும் தெருவிளக்குகள் சீரமைக்க அனுமதிக்கப்பட்ட நிதியைவிட அதிகமாக மாதா மாதம் செலவு செய்த பட்டியலை, விபரங்களாக சமர்ப்பித்துள்ளார்.

2. இம்முறை மன்ற நடுவத்தின் அறிவிப்பாணை எண்.422/2016/பேரூராட்சி/ நாள் 29.06.2016 வாயிலாக மேற்படி முறையீட்டு மனு மீது செயல் அலுவலரின் விளக்க அறிக்கை கோரப்பட்டது. இதனிடையே முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற அழைப்பாணை அ.ப.எண்.422/பேரூராட்சி/2016, நாள்: 5/7/2016 மூலம் 9/8/2016 அன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டார். 9.8.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற மேற்படி விசாரணையின் பொழுது முறையீட்டு மனுதாரர் கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்தார்:-

"திருமதி. புவனேஸ்வரி தாளியூர் பேரூராட்சி செயல் அலுவலர் மீது ஊழல் புகார் என்னால் குறிப்பிட்டப்பட்டு அனுப்பியிருந்தேன். அதில் இது குறித்து ஆவணங்கள் 13 கிலோ மேல் உள்ளதால் நேரில் ஆஜராகும் போது சமர்ப்பிக்கிறேன் என கூறியுள்ளேன். நான் தாளியூர் பேரூராட்சி செயல் அலுவலர் மீது தெரிவித்த குற்றச்சாட்டுக்கான ஆதாரங்களாக தாளியூர் பேரூராட்சியில் சில தகவல்கள் கோரியிருந்தேன். அந்த தகவல்கள் செயல் அலுவலர் வழங்கவில்லை. பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு மேல் முறையீடு செய்தேன். அங்கும் கிடைக்காத காரணத்தால் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் உள்ள ஆணையாளர்களிடம் 2வது முறையீடு செய்துள்ளேன். இன்னமும் எனக்கு உரிய தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை. பள்ளப்பாளையம் பேரூராட்சியில் திருமதி புவனேஸ்வரி செயல் அலுவலராக பணிபுரிந்த போது செய்த சில தவறுகள் குறித்து சில ஆவணங்களை தங்களிடம் சமர்ப்பித்துள்ளேன். இதில் அவர்கள் 2.2014 முதல் 3.2015 வரை செலவு செய்த தொகை மற்றும் 03.02.2014 முதல் 31.03.2015 வரை யார் யாருக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது என்ற விவரங்கள் அடங்கிய ஏழு தாள்கள் இத்துடன் சமர்ப்பித்துள்ளேன் என தெரிவித்துக் கொள்கிறேன். 13 கிலோ பேப்பர் என்னிடம் வீட்டில் உள்ளது. நான் சில விவரங்கள் பெறுவதற்கு பேரூராட்சி அலுவலகத்திற்கு சென்ற போது செயல் அலுவலரும் அவரது பக்கத்தில் இரண்டு கவுன்சிலர்களும் மற்றும் அலுவலக பணியாளர்களும் அமர்ந்து இருந்தனர். நான் ஏற்கனவே 2வது வார்டில் கவுன்சிலருக்கு நின்று தோற்றேன். அதை மனதில் வைத்துக்கொண்டு அந்த கவுன்சிலர்கள் ஏற்கனவே நின்று தோற்றவர்களை எதற்கு உள்ளே சேர்த்தீர்கள் என்று கூறி என்னை அவமரியாதை செய்தனர்.

அதை நிர்வாக அலுவலர் பார்த்து கொண்டு இருந்தார். அதை யாரும் தட்டிக் கேட்கவில்லை. இது எனக்கு பெருத்த அவமானமாக இருந்தது. எனவே இது குறித்து நான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறைக்கு மனு அனுப்பினேன். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையில் இருந்து இது குறித்து புகார்களை முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பவேண்டும் என மனுவை திருப்பி அனுப்பிவிட்டார்கள். அதன் பிறகு நான் மனுவை நான் முறைமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்." என்று தெரிவித்தார்.

3. பள்ளப்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் தமது 18.08.2016 நாளிட்ட எதிர்வாதுரையில், 16.12.2015 மற்றும் 28.01.2016 நாளிட்ட மனுதாரின் மனுவில் கோரியுள்ள 01.02.2014 முதல் 30.5.2015 வரை உள்ள தகவல்களை செயல் அலுவலர் கடித எண்.532/2015 நாள்.29.02.2016ன் வாயிலாக மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும், செயல் அலுவலர் 'முறை கேடுகள் புரிந்துள்ளதாக' பொத்தம் பொதுவாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார் எனவும், முறையீட்டு மனுதாரின் முறையீடு போன்று மக்களாலோ அல்லது வேறு எந்த ஒரு நபரினாலோ புகார் ஏதும் பெறப்படவில்லை எனவும், ஒவ்வொரு செலவினமும் மன்ற அனுமதி பெற்று வழங்கப்படுவதாகவும், தணிக்கை குறிப்புகளில் எந்த ஒரு செலவினத்தினையும் சுட்டிக் காட்டப்படவில்லை எனவும், ஒவ்வொரு செலவின இரசீதும் தணிக்கைத் துறைக்கு அனுப்பப்படுவதாகவும், தணிக்கைத்தடை ஏதும் பெறப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். எனவே பேரூராட்சி நிதி, விதி முறைகளுக்கு முரணாக செலவிடப்படவில்லை எனவும், புகார் மனு மீது நடவடிக்கை கைவிடப்படவேண்டிய ஒன்று எனவும் தெரிவித்துள்ளார். மனுதாரரின் மனு உண்மைக்கு புறம்பானது எனவும், மனுதாரர் பொய்யான புகார் மனு எழுதும் வழக்கத்தில் உள்ளவர் எனவும், மனுதாரர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல்கள் கோரியதற்கு பதில் தரப்பட்டுள்ளது எனவும், தற்போது தாளியூர் பேரூராட்சியில் பணிபுரியும்

திருமதி புவனேஸ்வரி குறித்த புகார் மனு ஏதும் பள்ளப்பாளையம் பேரூராட்சியில் இல்லை எனவும், இப்பேரூராட்சியில் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை எனவும், செலவினங்கள் மன்ற ஒப்புதலோடு செலவிடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

4. மேலும், திருமலையாம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் தமது 25.10.2016 நாளிட்ட எதிர் வாதுரையில் மனுதாரரின் 12.1.2015 நாளிட்ட கடிதத்தில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோரப்பட்ட தகவலுக்கு 26.2.2015 நாளிட்ட செயல் அலுவலர் கடிதத்தில் பதில் தரப்பட்டுள்ளது என்றும் மேலும் 16.12.2015 நாளிட்ட மனுதாரரின் மனுவில் கோரப்பட்ட தகவல்கள் 03.03.2016 நாளிட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பதிலுக்கு மனுதாரர் ஒப்புதல் அளித்துள்ளதாகவும், செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும், மனுதாரர் புகார் மனுவில், முந்தைய செயல் அலுவலர் திருமலையாம்பாளையம் பொது மக்களிடம், மறைமுகமாக லஞ்சம் பெறுகிறார் என்று பொதுவாக தெரிவித்துள்ளார் என்றும், முந்தைய செயல் அலுவலர் மீது லஞ்சப் புகார் ஏதும் பேரூராட்சி அலுவலகத்தில் பெறப்படவில்லை என்றும் செயல் அலுவலர் எதிர்வாதுரையில் தெரிவித்துள்ளார். மேலும் முறையீட்டு மனுதாரரின் மனு உண்மைக்கு புறம்பானது என்றும் மனுதாரர் பொய் புகார் எழுதும் வழக்கமுடையவர் என்றும், 2006 முதல் 2011 முடிய உள்ள காலத்தில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை என்றும், ஒவ்வொரு செலவினமும் சட்டப்படி மன்ற தீர்மானத்தின்படி செலவிடப்பட்டுள்ள-தாகவும், பேரூராட்சி நிதி விதிமுறைகளுக்கு முரணாக செலவு செய்யப்பட்டவில்லை எனவும் செயல் அலுவலர் எதிர் வாதுரையில் தெரிவித்துள்ளார்.

5. இம்முறைமன்ற நடுவத்தின் அழைப்பாணை அ.எண்.422/2016/பேரூ/ நாள் 21.10.2016 வாயிலாக திருமலையாம்பாளையம் மற்றும் பள்ளப்பாளையம் செயல் அலுவலர்கள் 22.11.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் அழைக்கப்பட்டனர்.

22.11.2016 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையின்பொழுது மேற்படி இரு செயல் அலுவலர்களும் தமது வாக்குமூலத்தில், தாளியூர் பேரூராட்சியில் தற்போது பணிபுரிந்து வரும் செயல் அலுவலர் திருமதி புவனேஸ்வரி, மாமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்த சமயம் திருமதிபார்வதி அவர்களை உள்ளே செல்ல அனுமதிக்காமல், கால தாமதப்படுத்தியதால், அதன் காழ்ப்புணர்ச்சி காரணமாக திருமதிபார்வதி அவர்கள் ஏற்கனவே திருமதி புவனேஸ்வரி செயல் அலுவலராக பணியாற்றிய பள்ளப்பாளையம் மற்றும் திருமலையாம்பாளையம் பேரூராட்சிகளில் அவர் பணியாற்றிய காலத்திற்குரிய செலவுச் சீட்டுகளை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் பெற்று, மேற்கண்ட செயல் அலுவலர் திருமதி புவனேஸ்வரி என்பவர் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவே மனுதாரர் தற்போது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் புகார் மனு செய்துள்ளார் என்றும், மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள புகார்களை பரிசீலித்ததில் பேரூராட்சியில் எந்த முறைகேடும் நடைபெறவில்லை என்றும் அனைத்து செலவினங்களும் பேரூராட்சி மன்ற ஒப்புதல் பெற்ற பின்பே மேற்கொள்ளப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்கள்.

6. முறையீட்டு மனுதாரர், செயல் அலுவலர் திருமதி K. புவனேஸ்வரி 12.01.2008 முதல் 15.09.2011 வரை மற்றும் 01.02.2014 முதல் 30.05.2014 வரை செயல் அலுவலராக முறையே திருமலையாம் பாளையம் மற்றும் பள்ளப்பாளையம் பேரூராட்சிகளில் பணிபுரிந்த போது முறைகேடுகள் புரிந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள முறையீட்டிற்கு செலவுப்பட்டியலை மட்டுமே ஆதாரமாக சமர்ப்பித்துள்ளார். போதிய ஆதார ஆவணங்கள் வேறு ஏதும் சமர்ப்பிக்கவில்லை. இந்நேர்வில், மனுதாரரின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், செயல் அலுவலரின் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவே முறையீடு செய்யப்பட்டுள்ளதாகவும் முறைகேடு ஏதும் நடைபெறவில்லை என்று விளக்கமளித்துள்ள

திருமலையாம்பாளையம் பேரூராட்சி மற்றும் பள்ளப்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர்களின் அறிக்கை மற்றும் வாக்குமூலங்களின் அடிப்படையிலும், மேற்படி முறையீட்டு மனு போதிய ஆதாரமற்றதாக கருதி தள்ளுபடி செய்யப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்,

பெறுநர்

1. திருமதி கே. பார்வதி,
   6/10, மேல சித்திரைச் சாவடி,
   உரியம்பாளையம், திகைப்பாளையம் (அஞ்சல்),
   கோயம்புத்தூர் – 641 109.

2. செயல் அலுவலர், திருமலையாம் பாளையம் பேரூராட்சி,
   திருமலையாம் பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம் – 641 105.

3. செயல் அலுவலர், பள்ளப்பாளையம் பேரூராட்சி,
   பள்ளப் பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம் – 642 112.